# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 01 JANUARY -2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# 2022

# இரட்டிப்பான நன்மையைத் தருவேன்

01 ஆசிரியர் உரை

04 இரட்டிப்பான நன்மையைத் தருவேன்

10 நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்

16 என்னோடே வர்றீங்களா?

18 நடப்பு செய்திகள்

இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் சார்பாக
உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும்

## இனிய புத்தாண்டு
## நல்வாழ்த்துக்கள்

2022
HAPPY
NEW YEAR

# ஆசிரியர் உரை

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவனுடைய பெரிதான கிருபையினால் இன்னும் ஒரு புதிய வருஷத்தைக் காண தேவன் கிருபை செய்தார். இம்மட்டும் கர்த்தர் நமக்கு உதவியாய் இருந்தார். எபெனேசராய் இருந்த ஆண்டவராகிய தேவன் இந்த புதிய வருஷத்தில் நமக்கும், நம்முடைய குடும்பத்திற்கும், நம்முடைய தேசத்திற்கும் போதுமானவராய் இருப்பார். இந்த புதிய வருஷத்திலே நாம் நம்முடைய வழிகளில் அல்ல, அவருடைய வழிகளில் நடக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று ஏசாயா 42:24-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய வழி உத்தமமானது, கடந்த நாட்களெல்லாம் நம்மை கண்ணின் மணி போல் காத்துப், பராமரித்த தேவன் வரும் நாட்களிலும் நமக்கு போதுமானவராக இருப்பார். கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற ஜனவரி 1-ஆம் தேதி செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து புத்தாண்டு ஆசீர்வாதக் கூட்டம் மாலை 3 மணி முதல் 6 மணி வரை நடைபெறும், அதைத் தொடர்ந்து 2 ஆவது சனிக்கிழமை ஜனவரி 9-ஆம் தேதி நடைபெறும் உபவாச ஜெபத்திலும் கலந்து கொண்டு, தேவ ஆசீர்வாதத்தைப் பெற உங்களை அன்போடு அழைக்கிறேன். நாம் செய்கிற ஒவ்வொரு காரியங்களிலும் கர்த்தருடைய கரம் நம்மோடிருந்து நடத்த வேண்டும். தொடர்ந்து திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9 மணி முதல் 9:45 மணி வரை நடைபெறுகின்ற கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் என்ற நிகழ்ச்சியை அநேகர் பார்த்து பயன்பெற்று வருகின்றனர். அந்த நிகழ்ச்சியை இன்னும் அநேகர் பார்த்து பயன்பெற ஜெபித்துக்கொள்ளுங்கள். இந்த மாதத்தில் இயேசுவை தினம் பார்க்கிறேன் என்ற நம்முடைய மாத இதழை முழுவதும கலர் பிரிண்டிங் செய்திருக்கின்றோம். தொடர்ந்து சந்தா செலுத்தி இந்த ஊழியத்தைத் தாங்குங்கள். உங்களுடைய ஜெபக் குறிப்புகளுக்காகவும், கர்த்தர் இந்த ஆண்டு முழுவதும் உங்களை மகிமையாக நடத்தவும் உங்களுக்காக பாரப்பட்டு ஜெபிக்கின்றோம். மேலும் உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்குங்கள். தேவனுடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருந்து வழி நடத்துவதாக.

அன்புடன் உங்கள் சகோதரர்

(சகோ. L .வின்சென்ட்ராஜ்)



TOLL FREE NUMBER

**1800 309 9333**



# இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்

(சகோ. L .வின்சென்ட்ராஜ்)

*சகரியா 9:12*

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒரு புதிய வருஷத்தைக் காண தேவன் நமக்கு கிருபை செய்தார். ரோமர் 14:6-ல் நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன், கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த புதிய வருஷத்தில் நாம், தேவன் மேல் வைக்கும் அன்பிலும், அவர் வாக்குத்தத்தத்தின்மேல் வைக்கும் நம்பிக்கையிலும் தான், அந்த வாக்குத்தத்தங்கள் நமக்குள் செயல்பட ஆரம்பிக்கிறது. இந்த புதிய வருஷத்திலும் தேவன் நமக்குச் செய்யப்போகிற நன்மைகளில், ஆசீர்வாதங்களில் இரட்டிப்பான நன்மையைத் தருவேன் என்கிறார். தேவன் இதுவரைக்கும், நாம் பிறந்த நாள்முதல் இந்நாள் வரைக்கும் எத்தனையோ நன்மைகளைச் செய்தார். அதைக்காட்டிலும் இரட்டிப்பான நன்மையைத் தருவேன் என்கிறார். பல வருஷம், பல மாதங்கள் நீங்கள் எதிர்பார்த்த காரியங்கள், நன்மைகள் நடக்காமல், நிறைவேறாமல் தாமதமாகிறதினால் மனச்சோர்வாகி, நீங்கள் தேவனை பின்பற்றுகிற காரியத்தில் சோர்ந்து போயிருக்கலாம். இப்படியாகத்தான் ராகேல் என்ற ஒரு பெண் சோர்ந்து போயிருந்தாள். யாக்கோபின் மனைவியாகிய ராகேல் பிள்ளை இல்லாமல் மலடியாக, மற்றவர்களால் பரியாசம் பண்ணப்பட்டு, மிகுந்த வேதனையோடு தன் கணவனாகிய யாக்கோபைப் பார்த்து எனக்கு பிள்ளை கொடு இல்லை என்றால் நான் சாகிறேன் என்று கணவனோடு போராடினாள்.அதற்கு யாக்கோபு தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் நான் தேவனா? என்று ஆதி 30:1,2-ல் சொன்னதைப் பார்க்கிறோம். நாட்கள் கடந்தன அந்த ராகேலுடைய அங்கலாய்பை, வேதனையை அறிந்த தேவன் அவளுக்கு இரட்டிப்பான நன்மையைத் தந்தார். ஆதி 30:22-24-ல் தேவன் ராகேலை நினைத்தருளினார். அவளுக்குத் தேவன் செவிகொடுத்து அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்று சொல்லி அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டான். அவள் நம்பிக்கையின்படியே தேவன், பென்யமீன் என்ற குமாரனையும் கொடுத்து இரட்டிப்பான நன்மையைத் தந்தார். இன்றைக்கு அந்த தேவன் உயிரோடிருக்கிறார். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். ராகேலுக்கு செய்த நன்மையை, அற்புதத்தை உங்களுக்கும் செய்வார். இனிவரும் நாட்களில், வருஷங்களில் இரட்டிப்பான நன்மையைத் தருவார். வேதாகமத்தில் அன்னாள் என்ற பெண்ணைப் பார்க்கிறோம். அவளும் பிள்ளை இல்லாமல் பல வருஷம் படாதபாடுபட்டாள், ஒருநாள் தேவசமூகத்தில் போய் மனம் கசந்து அழுதாள், விண்ணப்பம் பண்ணினாள். 1 சாமு 1:10,11-ல் சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன். அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள். ஆண்டவர் அவள் விண்ணப்பத்தின்படி, வேண்டுதலின்படி ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்து நன்மை செய்தார். அதோடு நிறுத்தவில்லை. 1 சாமு 2:21-ல் கர்த்தர் அன்னாளைக் கடாட்சித்தார், அவள் கர்ப்பவதியாகி மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் பெற்றாள். இரட்டிப்பான நன்மையை தேவன் தந்தார்.இதில் என்ன முக்கியமான காரியம் என்றால் தேவன், உங்களுக்கு

> “பிறந்த நாள்முதல் இந்நாள் வரைக்கும் எத்தனையோ நன்மைகளைச் செய்தார். அதைக்காட்டிலும் இரட்டிப்பான நன்மையைத் தருவேன் என்கிறார்.”

இரட்டிப்பான நன்மையைத் தந்தால் நீங்கள் அவருக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?. உங்களுக்கு எதற்கு இரட்டிப்பான நன்மையைத் தருகிறார்? இந்த உலகத்தை அனுபவிப்பதற்காகவா அல்லது வசதி வாய்ப்பைப் பெருக்கிக் கொள்வதற்காகவா? நாம் இந்த பூமியில் கர்த்தருக்காக, அவருடைய நாமத்தின் மகிமைக்காக வாழத்தான் ஆசீர்வாதம் நமக்கு கொடுக்கப்படுகிறது. அன்னாள் நீர் எனக்கு தந்த அனைத்தும், உம்முடைய நாம மகிமைக்கே என்று பாடினாள். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே தேவன் உங்களுக்கு தருகின்ற ஆசீர்வாதங்கள், நன்மைகள் அனைத்தும் எதற்கு? தேவ நாமம் உங்கள் மூலம் மகிமைப்பட வேண்டும், ஆகவேதான் இரட்டிப்பான நன்மையைத் தருவேன் என்றார். சங் 85:12-ல் கர்த்தர் நன்மையானதைத் தருவார், நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும் என்றார். சங் 84:11-ல் தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமானவர், கர்த்தர் கிருபையையும், மகிமையையும் அருளுவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார், மறுக்கமாட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே இன்றைக்கு நன்மையைத் தருவேன் என்றவர் இரட்டிப்பான நன்மையைத் தந்து உங்களை அளவில்லாமல் நிரப்பி நடத்துவார். ஆதி 45:18-ஐ வாசித்துப் பாருங்கள் யோசேப்பு தன் சகோதரர்களைப் பார்த்து உங்கள் தகப்பனையும், உங்கள் குடும்பத்தாரையும் கூட்டிக் கொண்டு என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நன்மையைத் தருவேன் தேசத்தின் கொழுமையைச் சாப்பிடுவீர்கள் என்றான் பஞ்சத்தில் ஒன்றுமேயில்லாத சூழ்நிலையிலே தேவன் அந்த சந்ததி முழுவதிற்கும் இரட்டிப்பான நன்மையை தந்து ஆசீர்வதித்தார். இன்றைக்கு இந்த வாக்குத்தத்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே இதுவரை நீங்கள் அனுபவிக்காதது எல்லாவற்றையும் தேவன் உங்களுக்குத் தருவார். யோபு 42:10-ல் யோபுவுக்கு முன் இருந்த எல்லாவறறைப்பார்க்கிலும் இரண்டத்தனையாகக் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார். இன்றைக்கு அந்த தேவன் இதுவரை நீ அறியாத, உனக்கு எட்டாத, உன் கண்ணுக்குப் புழப்படாத, உன் அறிவில், உன் மூளையில் உதிக்காத பொக்கிஷங்களை உனக்குத் தரப்போகிறார். ஏசாயா 45:2,3 உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு, வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்கு கொடுப்பேன் என்றார். உங்கள் கண்ணுக்கு மறைவாக, உங்கள் இருதயத்தில் தோன்றாத, மறைவானதை உங்களுக்குத் தருவார். உங்கள் வேலையில், வருமானத்தில், வியாபாரத்தில், தொழிலில், நம் குடும்பத்தில் இதுவரை அறியாத, பெற்றுக்கொள்ளாத நன்மைகளை நமக்குத் தருவார். ஆகவேதான் இரட்டிப்பான நன்மையைத் தருவேன், அதை இன்றைக்கே தருவேன் என்றார். என் தேவன், உங்களுக்கு ஒரு குறைவும் உண்டாகமல் இந்த வருஷத்தில், இனிவரும் நாட்களில், எந்தெந்த நேரத்தில் என்னென்ன தேவையோ அதை உங்களுக்குக் கொடுத்து, திருப்தியாக்கி இரட்டிப்பான நன்மையைத் தருவாராக. போகட்டும் எதையெல்லாம் தருவேன் என்றார். யார் யாருக்கு எவைகளைத் தந்தார் என்பதைப் பார்ப்போம்.

> “
>
> இன்றைக்கு தேவன் உங்களுக்கு தருகின்ற ஆசீர்வாதங்கள், நன்மைகள் அனைத்தும் எதற்கு? தேவ நாமம் உங்கள் மூலம் மகிமைப்பட வேண்டும், ஆகவேதான் இரட்டிப்பான நன்மையைத் தருவேன் என்றார்.

## தேசங்களைத் தருவேன்

நீ எழுந்து தேசத்தின் நீளமும், அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி, உனக்கு அதைத் தருவேன் என்றார். ஆதி 13:17. இந்த ஆபிரகாம், தேவன் தனக்குக் கட்டளையிட்டபடி அவன், தேவன் மேல் வைத்த அன்பின் நிமித்தம் தேசத்தையும், இன-த்தையும், தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு தேவன் காண்பிக்கும் தேசத்திற்கு ஒரு பரதேசியைப் போல புறப்பட்டுப் போனான். இயேசு சொன்னார் லூக்கா 14:26,27-ல் யாதொருவன், என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான், என் பிள்ளைகளாய் இருக்கமுடியாது என்றார். தேவனுக்காக யாவற்றையும் துறந்து, இழந்து இயேசு போதும் என்று வாழ்ந்தவர் தான் ஆபிரகாம். காரணம் தேவன் மேல் வைத்த அன்பினால் எல்லாவற்றையும் நஷ்டமாயும், குப்பையுமாக


எண்ணினவர். தேவனுக்காக யாவற்றையும் துறந்து வாழ்ந்தவர். அப் 7:5-ல் இந்த பூமியிலே, இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது உனக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதை சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். ஒரு அடி நிலம் கூட இல்லை அன்றைக்கு அவன் வாழ்க்கையில் தேவனை மட்டும் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒருமுறை சாது சுந்தர் சிங் தமிழ்நாட்டில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற இடத்தில் ஒரு ஆலயத்திற்கு பிரசங்கம்பண்ண அழைக்கப்பட்டிருந்தார். அந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், அன்று இரவு அவர் தங்குவதற்கு வசதியாக ஒரு பாயும், தலையணையும், ஒரு செம்பு தண்ணீரையும் வைத்திருந்தார்கள். காலையில் வந்து பார்த்தால், சாது சுந்தர் சிங்கை அந்த இடத்தில் காணவில்லை. அவர் ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு போயிருந்தார். நான் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் துறந்தவன், விட்டு வந்தவன். மலைகளிலும், குகைகளிலும், காட்டிலும் வாழ்ந்து தேவனைப் பின்பற்றினவன். அப்படிப்பட்ட எனக்கு நீங்கள் இவ்வளவு வசதியான ஒரு அறை, தலையணை, பாய், தண்ணீர் வைத்திருக்கிறீர்கள். இவ்வளவு வசதியாக, மேன்மையாக என்னால் ஊழியம் செய்ய முடியாது. கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னைப் பிரிப்பவன் யார்? என்று இந்த சின்ன மேன்மையைக்கூட துறந்து சென்றுவிட்டார். ஒரு வேளை ஆபிரகாம் இப்படியாகத்தான் எல்லாவ்றையும் விட்டு தேவனைப் பின்பற்றியிருப்பான். இயேசு எனக்குப் போதும், தேவன் எனக்குப் போதும் என்று அவரை முழு இருதயத்தோடு பின்பற்றினான். அதனால் ஆண்டவராகிய தேவன் பார்த்தார் இந்த முழு தேசத்தையும் நான் ஆபிரகாமுக்கு கொடுப்பேன் என்றார். காரணம் அவன் தேவனுக்குப் பிரியமுள்ளவன். அவரைப் பற்றிக் கொண்டு வாழ்பவன். ஆதி 18:18,19-ல் நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?. கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய், அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். தன் பிள்ளைகளுக்கும், சந்ததிகளுக்கும் என்னைப் பற்றி சொல்லுவான் என்றார். பொருளாசையாய் இராமல, பணப்பிரியராய் இராமல் தேவப்பிரியராய் இருங்கள் என்றவர், என் நாமத்திற்கு மகிமையாய் வாழுவான் என்று ஒரு அடி நிலம் கூட இல்லாத அவனுக்கு தேசத்தையும் அதின் குடிகளையும் தேவன் தருவேன், கொடுப்பேன் என்றார். தானி 5:21-ல் உன்னதமான தேவன் மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. தமக்குச் சித்தமானவனுக்கு பூமியையும், தேசத்தையும் தேவன் கொடுத்தார். ஆபிரகாமை தேவன் இப்படியாகத்தான் ஆசீர்வதித்து, நீ நடக்கிற, படுத்திருக்கிற உன் கால்பட்ட இடமெல்லாம் உனக்குத் தருவேன் என்று மகா சீமானாக, கர்த்தர் ஆபிரகாமை எல்லாக் காரியத்திலும் ஆசீர்வதித்தார். ஆபிரகாம் பின்பற்றின அதே தேவனைத்தான் நாமும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். ஆபிரகாமுக்கு நன்மை செய்து ஆசீர்வாதங்களைத் தருவேன் என்றவர், இன்றைக்கு இந்த போராட்டமான உலகில் பொருளாதாரம் முடக்கப்பட்ட நிலையில், வேலையை இழந்து, தொழிலை இழந்து ஒன்றுமே செய்ய முடியாமல் குடும்பத்தை நடத்த முடியாமல், விரும்புகிறதை, ஆசைப்பட்டதை வாங்க முடியாமல் தவிக்கின்ற நமக்கு ஒரு ஆசீர்வாதத்தை, ஒரு தொழிலை, ஒரு வருமானத்தை தருவார். என்னை நோக்கிக் கூப்பிடு, நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை செய்வேன் என்கிறவர் (எரே:33:3) உன்னுடைய எதிர்பார்ப்புகளையும், ஏக்கங்களையும் உனக்குத் தருவார், நிறைவேற்றுவார். உன் மனவிருப்பத்தை உனக்கு அருளிச் செய்வார். எத்தனை நாட்களுக்கு வெறுமையாய் இருப்பீர்கள், பற்றாக்குறையோடு வாழ்வீர்கள். தேவனிடத்தில் கேளுங்கள் அவர் உங்களுக்கு கொடுத்து நிறைவுபடுத்துவார். அவருடைய நாமத்தின் மகிமைக்காக

“என் நாமத்திற்கு மகிமையாய் வாழுவான் என்று ஒரு அடி நிலம் கூட இல்லாத அவனுக்கு தேசத்தையும் அதின் குடிகளையும் தேவன் தருவேன், கொடுப்பேன் என்றார்.”

உனக்கு அருளிச் செய்வார். எத்தனை நாட்களுக்கு வெறுமையாய் இருப்பீர்கள், பற்றாக்குறையோடு வாழ்வீர்கள். தேவனிடத்தில் கேளுங்கள் அவர் உங்களுக்கு கொடுத்து நிறைவுபடுத்துவார். அவருடைய நாமத்தின் மகிமைக்காக வாழச் செய்வார். 1 இராஜா 3:5-ல் கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பணத்திலே தரிசனமாகி, நீ விரும்புகிறதைக் என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். அப்பொழுது அவன் ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டான். நன்மை, தீமை இன்னதென்று வகையறுக்க, பகுத்தறிய ஞானமுள்ள இருதயத்தைத் தாரும் என்று கேட்டான். இந்த ஜெபம் தேவனுக்குப் பிரியமாய் உகந்ததாய் இருந்தது. நடந்தது என்ன? 1 இராஜா 3:13-ல் இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் உனக்குத் தந்தேன், உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை என்று ராஜ்யத்தைக் கொடுத்து அவனை உயர்த்தினார். இன்றைக்கும் உங்கள் மனம் தேவனைச் சார்ந்திருக்கிற போது, அவரைப்பற்றிக் கொள்ளுகிற போது நீங்கள் கேட்காத, எதிர்பார்க்காத யாவற்றையும் உங்களுக்குத் தந்து, கொடுத்து நிறைவுபடுத்துவாராக. இதைத்தான் தேவன் ஆபிரகாமுக்கு செய்தார். தேசத்தின் நீளம், அகலம் எந்தமட்டோ அதை உனக்குத் தருவேன் என்றார். அந்த தேவன் இன்றைக்கும், இனிவரும் நாட்களிலும், வருஷங்களிலும் உங்களுக்கு இரட்டிப்பான நன்மையைக் கொடுத்து ஆசீர்வதிப்பாராக.

## இளைப்பாறுதலைத் தருவேன் என்றார்

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார். மத் 11:28.



தேசத்தை தருவேன், ஆசீர்வாதத்தை தருவேன் என்றவர் இளைப்பாறுதலைத் தருவேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். நம்ம எந்த அளவுக்கு ஒரு காரியத்தில் முன்னேறுகிறோமோ, வளர்கிறோமோ விரிவடைகிறோமோ அந்த அளவுக்கு நமக்கு போராட்டங்களும், பிரச்சனைகளும் வரும். இப்படி நாம் எதிர்பாராத போராட்டங்களும், பிரச்சனைகளும், பாடுகளும் வரும்போது மனம் அமைதி இல்லாமல் இளைப்பாறுதல் இல்லாமல் கொந்தளிக்கிறது, அங்கலாய்க்கிறது, வேதனைப்படுகிறது. ஏசாயா 50:11-ல் இதோ, நெருப்பைக் கொளுத்தி, அக்கினிப்பொறிகளால் சூழப்பட்டிருக்கிற நீங்கள் அனைவரும், உங்கள் அக்கினி தீபத்திலும், நீங்கள் மூட்டின அக்கினி ஜீவாலையிலும் நடவுங்கள், உங்கள் வேதனையில் நடவுங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. பழைய கத்தோழிக்க மொழிபெயர்ப்பில், உங்கள் வேதனையின் மத்தியிலும் உறங்கிக் கிடப்பீர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளுக்குப் பாடுகள், உபத்திரவங்கள், போராட்டங்கள் வரும்போது அதைத் தாங்கிக் கொள்ளவும், அதை மேற்கொள்ளவும் தேவன் இளைப்பாறுதலையும், பெலனையும் தருகிறார். அப்படிப்பட்ட நேரத்தில் எல்லாம் எந்த ஒரு பதட்டமும், கோபமும், பயமும் அடையாமல் ஒரு நிதானத்தையும், சமாதானத்தையும் தருகிறார். ஆகவே தான் ஆபகூக் 2:4-ல் தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்றார். அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்க்கையைப் பாருங்கள் அவரை கைது செய்து துன்புறுத்தி, அடுத்த நாள் கொலை செய்ய வேண்டும், தூக்கில் போட வேண்டும் என்று சொன்ன போது எந்த பதட்டமும் அடையாமல், அந்த இரவு சிறைச்சாலையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். இதுதான் இளைப்பாறுதல், இதுதான் தேவசமாதானம், வேதனையின் மத்தியில் மகிழ்ந்திருப்பது. நடந்தது என்ன கர்த்தர் ஒரு தேவதூதனை அனுப்பி மிகவும் பத்திரமாக, அற்புதமாக வெளியே கொண்டு வந்தார். ஒருவனும் கைபோடாதபடிக்குக் காத்துக் கொண்டார். வேதனையிலே ஒரு சமாதானம், வேதனையிலே ஒரு இளைப்பாறுதல் இதைத்தான் ஆண்டவராகிய தேவன் மோசே என்ற தேவ மனிதனுக்கும் செய்தார். ஏறக்குறைய 24 லட்சம் ஜனங்களுக்கு தினந்தோறும் உணவு, தண்ணீர் கொடுக்க வேண்டும். ஜனங்களை பிரயாணப்பட்டு வழிநடத் வேண்டும். வழியிலே அவர்களுக்கு வந்த பாடுகள், நாச மோசங்கள் இவ்வளவு காரியத்தில் ஜனங்கள் அவரை நிலைகுலைய வைத்தார்கள், கோபப்படுத்தினார்கள், மோசேக்கு விரோதமாய் பேசினார்கள்.தேவன் அவரை கைவிட்டாரா? இரத்தக்கொதிப்பு அதிகமாகி, மன உளைச்சல் அதிகமாகி பெலவீனப்பட அனுமதித்தாரா? இல்லை. யாத் 33:14-ல் என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.இந்த இளைப்பாறுதல், இந்த தேவசமாதானம் உன்னை எந்த வேதனையிலும், எதிர்ப்பிலும் ஒன்றும்

செய்ய முடியாது. நீதிமானோ சிங்கத்தைப் போல் தைரியமாய் இருப்பான் என்று சொல்லப்பட்ட வார்த்தையின்படி மனஅமைதியோடு என் ஜனங்களை நடத்து, நீ தேவசமாதானத்தோடு என் ஊழியத்தைச் செய்வாய், என் கிரியைகளை நடத்துவாய் என்றார். ஆகவேதான் ஏசாயா 26:3-ல் உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் என்று தேவன் மோசேயை ஒரு வேதனையும் இல்லாமல் காத்துக்கொண்டார். இப்படியாகத்தான் இளைப்பாறுதலைத் தருகிறார். அது மாத்திரமல்ல ஏசாயா 28:11,12-ல் பரியாச உதடுகளினாலும், அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல். இதுவே ஆறுதல் என்று அவர்களாடே அவர் சொன்னார். எப்பொழுது, எல்லா-ப்பாடுகள், உபத்திரவங்கள் தேவ பிள்ளைகள் வாழ்க்கையில் பெருகுகிறதோ, அப்பொழுது எல்லாம், தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை அளவில்லாமல் அவர்கள் மேல் ஊற்றி, நிரப்பி எந்தத் தீங்கும் வராதபடிக்கு சமாதானத்தோடே காத்துக் கொள்கிறார். அதனால் தான் ரோமர் 8:26-ல் நம்முடைய பலவீனங்களில் ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே நமக்கு எவ்வளவு பாடுகள் உபத்திரவங்கள், பிரச்சனைகள் வந்தாலும் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். நீங்கள் கலங்காதபடி, பதறாதபடி, கோபப்படாதபடி தேவ சமாதான-த்தோடு ஒரு காரியத்தை செய்ய சாந்தத்தைத் தருவார். இந்த வருஷம் அவருடைய இளைப்பாறுதல், சாந்தம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். வேதம் சொல்லுகிறது ஏசாயா 54:13-ல் உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும் என்றார். என் ஆண்டவராகிய தேவன் தாமே இளைப்பாறுதலைத் தந்து பாதுகாப்பாராக.

## திறவுகோல்களைத் தருவேன்.

பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன் மத் 16:19. நன்மையாதைத் தருவேன், தேசத்தைத் தருவேன் என்றார். இன்றைக்கு நம் கையில் இருக்கும் ஆன்ட்ராய்டு செல்போனை வேறு யாரும் தொடக்கூடாது. அப்படிக் தொட்டாலும் அதை பயன்படுத்தக்கூடாது என்று லாக் போட்டு வைக்கிறோம். நம்முடைய ஏ டி எம் கார்டு, ஈ மெயில், இண்டர்நெட் இது போன்ற பல காரியங்களில் லாக் போட்டு வைக்கிறோம். திரும்ப அந்த பாஸ்வேர்ட் போட்டாலன்றி அதை திறக்க முடியாது. அதையும் மீறி வேறு யாரும் நம்முடைய செக்புக் மற்றும் கார்டுகள் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக இப்பொழுது ஓடிபி வருகிறது. அதைப் போட்டால்தான் உள்ளே போய் நாம் எதையும் செய்ய முடியும். இந்த பூமிக்கும் அப்படியிருந்திருந்தால் பரலோகராஜ்யம் எவவளவு மேன்மையானது எவ்வளவு பெரியது. பரலோக இராஜ்யத்தின் காரியங்கள் மனம் திரும்பாதவர்களுக்கு, இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு, முத்திரை போடப்பட்டிருக்கிறது, அவர்கள் இருதயம் மூடப்பட்டிருக்கிறது. அவர்கள் கண்கள் குருட்டாட்மாய் இருக்கிறது. எதுவும் புரிவதும் இல்லை, விளங்குவதும் இல்லை கண் சொருகிப்போய், இருதயம் திறக்கப்படாமல் இருக்கிறது. ஒரு மனிதனுடைய இருதயத்தில், ஆத்துமாவில் இயேசு வந்து அதைக்கழுவி, பரிசுத்தப்படுத்தி அந்த ஆத்துமாவை பரிசுத்த ஆவியினால் நிரப்பினால் தான், பவுலுக்கு செதில்கள் விழுந்து கண் திறக்கப்பட்டது போல, பவுல் பிரசங்கிக்கும் போது தியாளுடைய இருதயத்தை கர்த்தர் திறந்தது போல, இயேசு அப்பத்தைப்பிட்கும் போது சீஷர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது போல திறக்கப்படுகிறது.இன்றைக்கு அநேகருக்கு

> “ பலவிதமான போராட்டத்தோடு, எந்த ஒரு முன்னேற்றமுமில்லாமல் வெறுமையாக காணப்படுகிறோம் என்று அவருக்கு முன்பாக ஒளிவு மறைவுமின்றி ஜெபிக்கும் போது ஆண்டவர் அந்த பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைத் தருவேன் என்றார்.

பரலோக ராஜ்யத்தின் காரியங்கள், ஆவிக்குரிய காரியங்கள் இன்னும் மறை பொருளாகத்தான் இருக்கிறது. எவ்வளவு நாளானாலும், எவ்வளவு வருஷமானாலும் எந்த ஒரு வளர்ச்சியுமில்லாமல், முன்னேற்றமுமில்லாமல் தோய்ந்து போனவர்களாக, பலவீனப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆண்டவராகிய தேவன் இந்த புதிய வருஷத்திலே உங்களுக்கு ஒரு புதிய வழியை திறக்க வேண்டும். அது வேலையாக, தொழிலாக, ஊழியமாக, குடும்பத்தின் ஆசீர்வாதமாக இருக்கட்டும். அவர் திறந்தால் யாரும் பூட்ட முடியாது. அதற்கு நாம் கண்ணீரோடு ஜெபிக்க வேண்டும். வெளி 5:2-5-வரையில் புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையும் கண்டேன். வானத்திலாவது, பூமியிலாவது பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது. ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும், அதைப் பார்க்கவும், பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன். அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி நீ அழவேண்டாம். இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றார். இதுதான் பரலோகராஜ்யத்தின் திறவுகோல், வானத்தின் முத்திரை, பூமியில் இருக்கிற அந்தகாரத்தின் முத்திரையை உடைத்து ஜெயம் பெற்று இன்றைக்கு திறவுகோல்களை வைத்திருக்கிறவர் ஆண்டவராகிய இயேசு ஒருவரே. வெளி 1:18-ல் மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென் நான் மரணத்திற்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோலைகளை உடையவராயிருக்கிறேன் என்றார். இன்றைக்கு அந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உனக்கு அந்த திறவுகோலை, முத்திரைகளை உடைக்கிற சாவியை உனக்குத் தருவேன் என்கிறார். நீ அதற்காக அவரிடத்தில் உன்னைத் தாழ்த்திப் போராடி ஜெபிக்க வேண்டும். இதுவரை நாம் மூடி மறைக்கப்பட்டவர்களாக, ஆசீர்வாதமற்றவர்களாக, தொழில் செய்ய முடியாமல், வேலை செய்ய முடியாமல், வியாபாரம் செய்ய முடியாமல், குடும்பத்தை நடத்த முடியாமல், ஊழியம் செய்யாமல், அப்படியே செய்தாலும் பலவிதமான போராட்டத்தோடு, எந்த ஒரு முன்னேற்றமுமில்லாமல் வெறுமையாக காணப்படுகிறோம் என்று அவருக்கு முன்பாக ஒளிவு மறைவுமின்றி ஜெபிக்கும் போது ஆண்டவர் அந்த பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைத் தருவேன் என்றார். அப்பொழுது நீங்கள் உட்பிரவேசித்து உள்ளும் புறமும் மேய்ச்சலைக் கண்டடைய முடியும், ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க முடியும். ஏசாயா 22:22-ல் தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின் மேல் வைப்பேன். ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு அவன் திறப்பான், ஒருவனும் திறக்கக்கூடாதபடிக்கு அவன் பூட்டுவான் என்றார். இன்றைக்கு அந்த திறவுகோல்களை உடையவர் இந்த வருஷத்தில் உனக்கு அறிவின் திறவுகோலைத் தந்து, ஞானத்தின் திறவுகோலைத் தந்து இதுவரை நீங்கள் பெற்றுக்கொள்ளாத, அனுபவிக்காத ஆசீர்வதத்தைத் தந்து, பெரிதும் அநுகூலமான கதவுகளைத் திறந்து, உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிக்கப் போகிறார். அதற்குத்தான் திறவு கோலைத் தருவேன் என்றார். என் ஆண்டவராகிய தேவன் தாமே, இரட்டிப்பான நன்மையைத் தருவேன் என்றவர் ஆசீர்வாதத்தை தந்து, அபிஷேகத்தைத் தந்து, பரலோகராஜ்யத்தின் திறவுகோலைத் தந்து இந்த வருஷம் உங்களை மேன்மையாய் உயர்த்திப் பாதுகாத்து நடத்துவாராக, உயர்த்துவாராக. ஆமென்.


ஜெப உதவிக்கு

+91 944 28 00 447

+91 944 28 00 449

TOLL FREE NUMBER 1800 309 9333

CONTACT US



# நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்

சகோதிரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்.!

நாம் வாழ்கிற இந்த கடைசி நாட்களில் எத்தனையோ விதமான தீங்குகளை சந்தித்து வருகிறோம். கடந்த வருடங்களில் நாம் கடந்து வந்த தொற்றுநோயின் தாக்கம், இழப்புகள், புயல், வெள்ள சேதங்கள் எல்லாவற்றிலும் நம்மைக் காப்பாற்றி, இதுவரை நடத்தி வருகிறவர் நம் தேவனாகிய கர்த்தர். ஒரு புதிய வருடத்தை நாம் காண்கிறோம். இந்த வருடம் எப்படி? என்னவெல்லாம் சந்திக்கப்போகிறோம்? என்று எதுவுமே நமக்கு தெரியாது. ஆனால் நாம் கடந்து போகிற எல்லா வழிகளிலும், நம்மோடு துணைநின்று நம்மை காப்பாற்றுகிறவர் நம் தேவனாகிய கர்த்தர். அவர் தான் நம்மைப் பார்த்துச் சொல்கிறார். என் மகளே! நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். ஏசா 41:9-ல் நீ என் தாசன் நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். நான் உன்னை வெறுத்து விடவில்லை என்றார். எத்தனை பெரிய பாக்கியம். நம்மை அவர் தெரிந்து கொண்டிருப்பது. ஏதோ, தகுதியுடையவர்களாய் நாம் இருப்பதினால் அல்ல, எந்த தகுதியும் இல்லாத நம்மை, தேவன் தெரிந்து கொண்டார்.

"நம்மை அவர் தெரிந்து கொண்டிருப்பது. ஏதோ, தகுதியுடையவர்களாய் நாம் இருப்பதினால் அல்ல, எந்த தகுதியும் இல்லாத நம்மை, தேவன் தெரிந்து கொண்டார்."

1 கொரி 1:27,28-ல் ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார் என்று பவுல் எழுதுகிறார். இந்த உலகம் நல்ல திறமை நிறைந்தவர்களை, படித்தவர்களை, பலமுள்ளவர்களை தெரிந்தெடுக்கிறது. ஆனால் ஆண்டவர் இயேசு பலவீனமுள்ளவர்களாகிற நம்மை, சின்ன விஷயத்திற்கும் மனமடிவாகி, சோர்ந்து போகிற நம்மை, ஒன்றுக்குமே உதவாத, இழிவான, பெலனில்லாத நம்மை தேவன் தெரிந்து கொண்டது. இது எவ்வளவு பெரிய பாக்கியம்!. சங் 33:12-ல் கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது. உபா 7:6-ல் நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம். பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும்

உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார். உபா 14:2-ல் நீங்கள் உங்கள் தேவனாகியக் கர்த்தருக்குப்
பரிசுத்தமான ஜனங்கள், பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும், உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார். மணப்பெண்ணைப் பார்க்க மணமகன் வீட்டார் வருகிறார்கள், நல்ல குடும்பம், நல்ல பையன் பெண்ணைப் பிடித்திருக்கிறது என்றால், எத்தனை மகிழ்ச்சி வீட்டாருக்கு வருகிறது. நல்ல குடும்பத்துப் பெண், ஆண்டவருக்குப் பயந்து வாழ்கிற, ஜெபிக்கிற பெண், பையனை பிடித்திருக்கிறது என்று சொல்லி விட்டார்கள் என்றால் எத்தனை மகிழ்ச்சி உண்டாகிறது. இந்த பூமியிலேயே நம்மைத்தான் சொந்த ஜனமாக தெரிந்துகொண்டார் என்பது நமக்கு எவ்வளவு பெரிய மேன்மை. கர்த்தர் வேதத்தில் சிலரை எப்படி? எதற்குத் தெரிந்துகொண்டார், அவர்கள் என்ன செய்தார்கள், நாம் என்ன செய்ய வேண்டும் என்று பார்ப்போம்.

## கர்த்தர் எதற்காக தெரிந்து கொண்டார்.

கர்த்தர் சீயோனைத் தெரிந்து கொண்டு அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம். இதை நான் விரும்பினபடியால் இங்கே வாசம் பண்ணுவேன். சங் 132:13,14. கர்த்தர் எதற்காக நம்மை தெரிந்து கொள்கிறார்.

### நம்மோடு வாசம்பண்ண.

நாம் அவருக்கு வாசஸ்தலமாக இருக்க. நம்மேல் பிரியம் வைத்து, நம்மிடத்தில் தங்க, வாசம்பண்ண தெரிந்து கொண்டார்.



இயேசு பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்தெடுத்தார். மாற் 3:14,15-ல் அவர்கள் தம்மோடு இருக்கவும், பிரசங்கம்பண்ணவும், வியாதிகளைக் குணமாக்கி, பிசாசுகளைத் துரத்தவும் ஏற்படுத்தினார் என்று வாசிக்கிறோம். பூச்சக்கரத்திலுள்ள எல்லாப் பெண்களிலும் மரியாளைத் தேவன் தெரிந்து கொண்டு, இந்த மனுக்குலத்திற்கு தன்னை வெளிப்படுத்தினார்.எப்படி மாம்சத்தில் மரியாளின் வயிற்றில் இயேசு தங்கியிருந்தாரோ,மரியாள் இயேசுவை சுமந்தாரோ அதைக் காட்டிலும் மேலாக நாம் அவரோடு இருக்கவும், அவர் நம்மோடு இருக்கவும் தான் நம்மைத் தெரிந்து கொண்டார். 1 கொரி 3:16, 6:19-லும் நீங்கள், உங்கள் சரீரம் தேவனுடைய ஆலயம், ,தேவனுடைய ஆவி உங்களுக்குள் வாசமாயிருக்கிறார். உங்களில் தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறீர்கள். நீங்கள் உங்களுக்கு சொந்தமானவர்களல்ல என்று பவுல் எழுதுகிறார்.

### கனி கொடுக்க.

யோவான் 1516-ல் நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை நான் உங்களை தெரிந்து கொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்கு கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்குமபடிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன் என்று இயேசு சொன்னார். அவருக்காக கனி கொடுக்கும்படி நம்மை தேவன் ஏற்படுத்தினார். கனி மரங்கள் அந்தந்த காலத்தில் பழுத்து, பலன் தருகிறது. அது பழம் கொடுக்கும் பருவம் முடிந்ததும் நின்றுவிடும். ஆவிக்குரிய நாம் அப்படி இருக்கக்கூடாது, இருக்கவும்முடியாது. அத்திப்பழக் காலமில்லாத நேரத்திலும் ஆண்டவர், கனியைத் தேடினார். சூழ்நிலைகள் எதிராக இருக்கிற போதும், சாதகமாய் இல்லாமல் இருக்கும் போதும் கனியுள்ள வாழ்க்கை வாழப்

போராடுகிறோம். ஆண்டவர் அதற்குத்தான் நம்மை ஏற்படுத்தியிருக்கிறார் என்று உணர்ந்து நம்மை அர்ப்பணிக்கும் போது, சில வேளைகளில் தவறினாலும் நம்மை மறுபடியும் சீரான வாழ்க்கைக்குள் உட்படுத்திக் கொண்டு ஜெயத்தோடு வாழ முடியும்.

### திறப்பிலே நிற்க.

சங் 106:23-ல் அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார். அப்பொழுது, அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான். தேவனை மறந்து, அவரை தேடாமல் மனம்போன போக்கில் போன மக்களை தேவன், அழிக்க நினைத்த போது வேண்டாம் ஆண்டவரே! மன்னியும், அழித்து விடாதிரும். உம்முடைய கோபம் அமரட்டும், அவர்களை மனம்திரும்ப விடும் என்று இடைமறித்து மன்றாடி ஜெபித்தான். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே செய்தது போல நாமும் திறப்பின் வாயிலே நிற்க, மன்றாட நம்மைத் தேவன் தெரிந்து கொண்டார். நாம் சோர்ந்து போகாமல் ஜெபம்பண்ண ஆண்டவர் இயேசு ஒரு உவமையைச் சொன்னார். ஒரு விதவைப் பெண்ணுக்கு எதிராளியிடம் இருந்த காரியத்தில், நியாயாதிபதினிடத்தில் விண்ணப்பம் பண்ணும் போது அவன் தேவனுக்குப் பயப்படாதவனும், மனிதனை மதியாதவனுமாயிருந்ததால் அவள் சொல்வதைக் கவனிக்காமலே இருந்தான். ஆனால் அவளோ அடிக்கடி கேட்டுக்கொண்டே இருந்தாள். என்னை தொந்தரவு செய்யாதபடி இவள் காரியத்தை கவனித்து நியாயம் செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொன்னான். அதுபோலவே லூக் 18:7-ல் அந்தபடியே தேவன் தம்மை நோக்கி இரவும், பகலும் கூப்பிடுகிறவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயம் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று சொன்னார். நம் காரியத்திற்கோ, மற்றவர் காரியத்திற்கோ ஜெபம் ஏறெடுக்கும் போது தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவனை நோக்கி மன்றாடும்போது அதை தேவன் கட்டாயம் கேட்பார். கேட்பார். அதற்காகவே நம்மை தெரிந்தெடுத்திருக்கிறார்.

## இராஜாக்களாக, ஆசாரியர்களாக, லேவியராக தெரிந்து கொண்டார்.

இவர்களில் சிலரை ஆசாரியர்களாகவும், லேவியராகவும் தெரிந்து கொள்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று ஏசாயா 66:21-ல் வாசிக்கிறோம். வெளி 1:6-ல் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களாகவும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக ஆமென்! என்று யோவான் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட செய்தியில் நம்மை ராஜாக்களாக, ஆசாரியர்களாக தெரிந்து கொண்டார் என்று சொல்லுகிறார்.

### ராஜாக்கள்.

முழு சமஸ்த இஸ்ரவேலுக்கும் சவுலை தேவன் ராஜாவாக மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி தெரிந்து கொடுத்தார். 1 சாமு 10:24-ல் சாமுவேல் எல்லா ஜனங்களையும் நோக்கி கர்த்தர் தெரிந்து கொண்டவனைப் பாருங்கள். சமஸ்த ஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமானமானவன் இல்லை என்றார். ஆனால் சவுல் ராஜாவாக இருக்க வேண்டிய நிலையில் இல்லாமல் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனான். 1 சாமு 16:1-ல் சாமுவேலிடம் உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக் கொண்டு வா பெத்தலகேமியனாகிய ஈசாயிடம் உன்னை அனுப்புவேன். அவன்குமாரனில் ஒருவனை நான் ராஜாவாக தெரிந்து கொண்டேன் என்றார். அதே போல 1 இராஜா 8:16-ல் இஸ்ரவேலின் மேல் அதிகாரியாயிருக்கும்படி தாவீதையே தெரிந்து கொண்டேன் என்றார். அதே போல 1 நாளா 28:5,6 வசனங்களில் தாவீது தன் மகன் சாலொமோனைப் பற்றி கர்த்தர் எனக்கு அநேகம் குமாரர்களைத் தந்தருளினார்.ஆனாலும் இஸ்ரவேலை ஆளும்

கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின் மேல் உட்காருகிறதற்கு அவர் என்னுடைய எல்லா குமாரரிலும் என் குமாரனாகிய சாலோமோனைத் தெரிந்து கொண்டு, அவர் என்னை நோக்கி உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும், என் பிரகாரங்களையும் கட்டக்கடவன். அவனை எனக்குக் குமாரனாகத் தெரிந்து கொண்டேன். நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன் என்றார்.

சாலோமோன் நல்ல ஒரு ஆலயத்தை கர்த்தருக்கு கட்டினான். ஆனால் பல அந்நிய பெண்களோடு சேர்ந்து தேவனைவிட்டு விலகினான். அதினிமித்தம் சாலொமோனின் ஊழியக்காரன் யெரொபெயாமிடம் இஸ்ரவேலின் மேல் ராஜாவாக இருப்பதற்காக நான் உன்னை தெரிந்து கொண்டேன் என்றார். 1 இராஜா 11:37. அவனும், தனக்கென்று கன்றுகுட்டிகளை செய்து எகிப்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் இவைகள் என்று கோவிலைக் கட்டி ஈனமானவர்களை ஆசாரியராக்கினான். இந்தக் காரியம் பாவமாயிற்று. அநேக ராஜாக்கள் இந்த யெரொபெயாமின் பாவத்தில் தான் இருந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஆனால் தாவீது மாத்திரம் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக இருந்தான். தவறுகளும், குறைகளும் அவன் வாழ்விலும் இருந்தது உண்மைதான், ஆனால் கர்த்தரிடம் தாழ்த்தவும், மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கவும் தவறாதவன். இன்றைய ராஜாக்களாக நம்மை தேவன் தெரிந்தெடுத்து இருக்கிறார். நாம் தாவீதைப் போல தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக இருப்போம்.

“ தவறுகளும், குறைகளும் அவன் வாழ்விலும் இருந்தது உண்மைதான், ஆனால் கர்த்தரிடம் தாழ்த்தவும், மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கவும் தவறாதவன். ”

**ஆசாரியன்.**

ஆரோனும், அவன் குமாரரும் சர்வாங்க தகனபலிபீடத்தின் மேல் பலியிட்டு தூபம் காட்டும் பீடத்தின் மேல் தூபம் காட்டி மகா பரிசுத்த ஸ்தலத்தின் எல்லா வேலைக்கும் தேவனுடைய தாசனாகிய மோசே கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேலுக்காகப் பாவநிவிர்த்தியுண்டாக்குகிறதற்கும் வைக்கப்பட்டிருந்தார்கள். 2 நாளா 6:49 ஆரோன் ஆசாரியன் அவனுக்கும், அவன் குமாரருக்கும் என்ன பணி என்றால் இஸ்ரவேலுக்காக பாவ நிவிர்த்தியுண்டாக்குவது, பலிகளை செலுத்துவது. இன்றைக்கு நமக்கும், நம் குடும்பத்தார், நம்மை சார்ந்தவர்கள், தெரிந்தவர்கள், தேசத்தின் மக்கள் எல்லாருடைய பாவங்களுக்காக மன்றாடுவது, இயேசுவின் இரத்தத்தால் என் கணவரின் பாவம் மன்னிக்கப்படட்டும், பிள்ளைகள், குடும்பத்தார், இனஜன பந்துக்கள், தேசத்தின் குடிகள் எல்லாரையும் மன்னியும், அநீதியாய் செயல்படுகிறவர்களின் குற்றங்களை நீக்கி மன்னியும், உமது இரத்தம் கழுவட்டும், பரிசுத்தமாக்கும் என்று சொல்லி அவர்களுக்காக தேவ சமூகத்தில் நிற்போம். பாவநிவிர்த்தியாக்குவது, தூபம் காட்டுவது என்பது துதி, ஸ்தோத்திரங்களை ஏறெடுத்து ஜெபித்து மன்றாடுவது. இதுதான் இன்றைக்கு ஆசாரியர்களாக நாம் செய்வது.

**லேவியர்**

அக்காலத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமப்பதற்கும், இந்நாள் வரைக்கும் நடந்து வருகிறது போல கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும், அவர் நாமத்தைக் கொண்டு ஆசீர்வதிப்பதற்கும் கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுத்தார். லேவியராகி நாம் கர்த்தருடைய சந்நிதியில் நின்று ஆராதனை செய்ய உடன்படிக்கை பெட்டியை, தேவனுடைய வார்த்தையை சுமக்க, இயேசுவின் நாமத்தைக் கொண்டு ஜனங்களை ஆசீர்வதிக்க தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். 1 நாளா 23:28-32 வரை வாசிக்கும் போது ஆரோனின் குமாரரின் கீழ் ஆலயத்தின் சுத்திகரிப்பு, ஆலய வேலைகளை விசாரிக்க காலையிலும், மாலையிலும் கர்த்தரைப் போற்றித் துதிக்க, கர்த்தருக்கு முன்பாக நின்று கூடாரத்தின் காவலை காக்க ஆலயத்தின் பணிவிடைகளைச் செய்வது, அவர்கள் வேலையாயிருந்தது. ஆசாரியர்களும், லேவியர்களும் இசைந்து இந்த வேலையை கவனித்தார்கள். உபா 21:5-ல் உன்

தேவனாகிய கர்த்தர் தமக்கு ஆராதனை செய்யவும் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வதிக்கவும் லேவியின் குமாரராகிய ஆசாரியரை தெரிந்து கொண்டார் என்று வாசிக்கிறோம். நம்மையும் தேவன் ராஜாக்களாக, ஆசரியர்களாக, லேவியராக அவருக்கு பணிவிடை செய்ய, தூபம் காட்ட, ஆராதனை செய்ய, உடன்படிக்கைப் பெட்டியை சுமக்க, ஆசீர்வதிக்க தேவன் தெரிந்து கொண்டார்.

> “நம்மை பரிசுத்தமாக்கி சிறந்த வஸ்திரங்களான ஆவியினாலும் வல்லமையினாலும், வரங்களினாலும், கனிகளினாலும் நம்மை நிரப்பி வல்லமையான கருவிகளாக பயன்படுத்தப்போகிறார்.”

## உன்னைத் தெரிந்து கொண்டேன்.

சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே உன்னை நான் அந்நாளில் சேர்த்துக் கொண்டு உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். ஆகாய் 2:23-ல் வாசிக்கிறோம். பவுல் தேவனுக்கு எதிராக இருந்தவன். ஆனால் கர்த்தர் அவரை சந்தித்தார் அப் 9:15-ல் அனனியாவிடம் கர்த்தர் நீ போ அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்று பவுலை வல்லமையாய் பயன்படுத்தினார். நாம் கடந்த காலங்களில் குறைவுள்ளவர்களும், கறை படிந்த வாழ்வு உள்ளவர்களாய் இருந்திருக்கலாம். சக 3:2,3,4-ல் கர்த்தர் சாத்தானை நோக்கி கர்த்தர் உன்னை கடிந்துக் கொள்வாராக. எருசலேமை தெரிந்து கொண்ட கர்த்தர் உன்னை கடிந்து கொள்வாராக. இவன் அக்கினியிலிருந்து தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா என்றார். கொள்ளிக்கட்டை என்பது அக்கினியில் நன்றாக எரிந்திருக்கும். ஆனால் இணைந்து விடுவதற்குமுன்பு எடுத்து விடுவார்கள். யோசுவாவோவெனில் ஆசாரியன் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் நின்று கொண்டிருந்தான். கடந்த காலங்கள் நமது வாழ்வு இப்படித்தான் இருந்தது. ஆனால் இனி அப்படி இருப்பதில்லை. கர்த்தர் குற்றப்படுத்தும், சாத்தானை கடிந்து கொண்டு நமது அழுக்கு வஸ்திரங்களை களைந்து விட்டு நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து உனக்குச் சிறந்த வஸ்திரத்தை தரிப்பித்தேன் என்றார். நம்மை பரிசுத்தமாக்கி சிறந்த வஸ்திரங்களான ஆவியினாலும் வல்லமையினாலும், வரங்களினாலும், கனிகளினாலும் நம்மை நிரப்பி வல்லமையான கருவிகளாக பயன்படுத்தப்போகிறார்.

## உபத்திரவத்தின் குகையில் உன்னைத் தெரிந்து கொண்டேன்.

இதோ, உன்னைப் புடமிட்டேன், ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன் ஏசாயா 48:10-ல் ஆண்டவர் சொல்கிறார். இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தை வாசித்தார் யாரை தேவன் சொல்கிறார் என்றால் இஸ்ரவேல் என்னும் பெயர் பெற்று, யூதாவின் நீரூற்றுகளிலிருந்து சுரந்தவர்களும், கர்த்தரின் நாமத்தில் ஆணையிட்டு அவரை அறிக்கை பண்ணுகிற, ஆனால் உண்மையும், நீதியும் இல்லாதவர்களாய் இருக்கிற உங்களைப் புடமிட்டேன். உபத்திரவத்தின் குகையிலே உங்களை புடமிட்டுத் தெரிந்து கொண்டேன் என்கிறார்.

இதுவரை நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாய் இருந்தாலும் உண்மையும் நீதியும் இல்லாதவர்களாய் இருந்திருக்கிறோம். உண்மை தான் ஆனால் பல உபத்திரவங்களைப் பாடுகளை, சிட்சைகளை தேவன் அனுமதித்து, நம்மை புடமிட்டார். உடைத்து உருவாக்கினார். நல்ல சுத்தப்பொன்னாக நம்மை மாற்றித் தெரிந்து கொள்கிறார்.

## இன்னும் எருசலேமைத் தெரிந்து கொள்வார்.

இன்னும் என்று ஆரம்பிக்கிற வார்த்தை மறுபடியும், திரும்பவும் நம்மைத் தெரிந்து கொள்வார் என்று அறிந்து கொள்கிறோம். சகரியா 1:17-ல் இன்னும் என் பட்டணங்கள் நன்மையினால் பரம்பியிருக்கும். இன்னும் கர்த்தர் சீயோனைத் தேற்றரவு பண்ணுவார், இன்னும் எருசலேமைத் தெரிந்து கொள்வார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். 1 நாளா 6 6-ல் என் நாமம் விளங்கும் ஸ்தலமாகிய எருசலேமையும், என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் அதிபதியாய் இருக்க தாவீதையும் தெரிந்து கொண்டேன் என்கிறார். இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் உங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்புங்கள் என்று கர்த்தர் சொன்ன போது கவனிக்காமல், செவிகொடாமல் போனதால் தேவ கோபம் இறங்கி வந்து எழுபது வருஷம் சிறையிருப்பில் ஜனங்கள் போய் கொண்டிருக்கும் போது கர்த்தருடைய தூதர்கள் இறங்கி விட்டார்கள். சகரியா:1:12-ல் சேனைகளின் கர்த்தாவே இந்த எழுபது வருஷம் நீர் கோபம் கொண்டிருக்கிற எருசலேமின் மேலும் யூதா பட்டணங்களின் மேலும் எந்தமட்டும் இரங்காதிருப்பீர் என்நுறு சொல்லும் போதுதான் கர்த்தர் தம் ஜனங்களுக்காக வைராக்கியம் கொண்டு, இதுவரை தம் ஜனத்தை பாழ்படுத்தினவர்கள் மேல் கோபம் கொண்டு, மனஉருக்கத்தோடே தம் ஜனத்திடம் திரும்பினேன் என்று சொல்லித்தான் இன்னும் என் பட்டணம் நன்மையினால் பரம்பியிருக்கும். இன்னும் தன் ஜனத்தை தேவன் தேற்றி எருசலேமை , தம் ,ஜனமாகிய நம்மை தெரிந்து கொள்வார். எத்தனை மகிழ்ச்சி! ஆண்டவர் நம்மைக் கைவிடுவதில்லை, திரும்பவும் நன்மையினால் நிரப்பி நம்மைத் தெரிந்து கொள்வார். தேவன் தாமே நம்மோடு கூட இருந்து வழுவாமல் கடைசிவரை நம்மைக் காப்பாராக!.

**வாசகர்கள் கவனத்திற்கு!**

உங்கள் சந்தாவை இனி G-PAY மூலம் செலுத்தலாம் மற்றும் இந்த ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

G Pay +91 944 3009 333






# என்னோடே வர்றீங்களா?

ஹலோ, குட்டீஸ் ஹேப்பி நியூ இயர்!
இன்னைக்கு லீவு ,நல்ல விளையாடலானும்னு நினைச்சுட்டே சன்னலைத் திறந்தாள் ஜெஸிகா. வெளியே மழை பெய்திட்டு இருந்துச்சு. அப்போ நம்ம விளையாண்ட மாதிரித்தான்னு அவ நெனச்சுட்டு இருக்கும்போதே, அம்மா அவளை கூப்பிட்டு. அந்த சாரம்மா வீட்டுக்குப் போய் இந்த சாப்பாட்ட கொடுத்துட்டு கொஞ்சம் உதவி செஞ்சுட்டு வாம்மா என்றார்கள். பாவம்,அந்தப் பாட்டி தனியா இருக்காங்க, . மழை வேற பேஞ்சிட்டே இருக்குது. கடைக்கும் போய் சாப்பாடோ ,சாமானோ அவுங்களால வாங்க முடியாது .அதனால சரின்னு சொல்லி புறப்பட்டாள் ஜெஸிக்கா .ஆனா அவளுக்குளேயோ ஒரே பயம் ஏன்னா, அந்த பாட்டி வீடு ரொம்ப தூரமா இருக்குது. சாரா பாட்டி வீட்டுக்கு இதுக்கு முன்னால அவ போனதேயில்லை, இடி இடிக்குது, மின்னலடிக்குது எப்படி தனியா போறதுன்னு கதவு வரைக்கும் போய் நின்னுட்டு, மறுபடியும் அம்மா கிட்ட வந்து, அம்மா, எனக்கு ஒன்னும் பயம் எல்லாம் இல்ல பாதி தூரம் வரையாவது என்னோட வர்றீங்களா? என்று கேட்டாள். அவள் முகத்தைப் பார்த்தவுடனே அவள் பயப்படுகிறாள்ன்னு அம்மாவுக்கு தெரிஞ்சிருச்சு .ஜெஸிக்கா, பாதி தூரமில்ல, அவுங்க வீடு வரைக்குமே நான் உன்னோடே வர்றேன் .ர்ந் ஹ்ஹ என்றார்கள், ஜெஸிகாவுக்குள்ள இருந்த பயமெல்லாம் எங்கே போச்சுன்னு தெரியல .அம்மாவின் கையைப் பிடிச்சுக்கிட்டு, சந்தோஷமா சாரா பாட்டி வீட்டுக்குப் போனாள் .

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, என்னை எல்லாவித பயத்திலிருந்தும் விடுவித்து, இந்த வருஷம் முழுவதும் பத்திரமா, பாதுகாப்பாக நடத்திச்செல்லுங்க, கூடவே வாங்க. உங்க கையை இறுகப் பிடித்துக்கொள்ளுகிறேன் நன்றி இயேசப்பா இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென் .



## மனப்பாட வசனம்

நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்.
உபாகமம் 31:6

# Our Elder son Daniel & Princy's Marriage Blessing ceremony








எங்கள் மூத்த மகன் டேனியேல் & பிரின்சி திருமண ஆசீர்வாதவிழாவை நடத்த தேவன் கிருபை கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

(சகோ. L .வின்சென்ட்ராஜ் சகோதிரி. கலா வின்சென்ட்ராஜ்)

# நடப்பு செய்திகள்



## ஒமைக்ரானால் தென் ஆப்பிரிக்காவில் நான்காவது அலை



ஒமைக்ரான் கொரோனா வைரஸ் மாறுபாட்டால் தென் ஆப்பிரிக்கா நான்காவது அலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் ஜோ பாஹ்லா தெரிவித்துள்ளார். நாட்டின் உள்ள 9 மாகாணங்களில் 7-ல் ஒமைக்ரான் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பல உயிரிழப்புகளை ஏற்படுத்தாமல் ஒமைக்ரான் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்று நம்புவதாகவும் அமைச்சர் ஜோ பாஹ்லா செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். தென் ஆப்பிரிக்கர்கள் அனைவரும் முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு வலியுறுதிய அவர், கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்காமலேயே நான்காவது அலையை நிர்வகிக்க முடியும் என்றும் கூறினார். உலக அளவில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும் உருமாற்றம் பெற்ற ஒமைக்ரான் கொரோனா வைரஸ், கடந்த மாதம் தென் ஆப்பிரிக்காவில் முதன்முறையாக கண்டறியப்பட்டது.

## நிலவில் 800 கோடி மனிதர்கள் 1 லட்சம் ஆண்டுகள் வாழ தேவையான ஆக்ஸிஜன் உள்ளது : ஆய்வில் தகவல்!

இன்றைய தொழில்நுட்ப உலகில் ஒவ்வொரு நாளும் விண்வெளி சார்ந்த ஆராய்ச்சி மற்றும் ஆய்வு பணிகளுக்காக உலக நாடுகள் நேரத்தையும், பொருளையும் செலவிட்டு வருவதை நம்மால் பார்க்க முடிகிறது. அதில் ஒரு முயற்சி தான் நிலவில் ஆக்ஸிஜன் இருப்பது தொடர்பான ஆராய்ச்சி. இந்த தகவல் நம்பமுடியாத ஒரு ஆய்வின் முடிவில் தெரியவந்துள்ளது. அந்த ஆய்வில் நிலவில் மேற்பரப்பில் 800 கோடி மனிதர்கள் 1 லட்சம் ஆண்டுகள் வாழ தேவையான ஆக்ஸிஜன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் ஆக்ஸிஜன் நிலவின் 'ரெகோலித்'-தில் (நிலவின் மேற்பரப்பில் உள்ளடங்கியுள்ள பாறை மற்றும் தூசு அடுக்குகள்)
இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆக்ஸிஜன் வாயு வடிவில் நிலவில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக கடந்த அக்டோபரில் ஆஸ்திரேலிய விண்வெளி முகமையும், அமெரிக்காவின் நாசாவும் இணைந்து ரோவார் ஒன்றை நிலவுக்கு அனுப்பி உள்ளன. அதன் மூலம் அங்கு இருக்கும் பாறைகளை சேகரித்துக் கொண்டு வந்து, அதை மனிதன் சுவாசிக்க கூடிய ஆக்ஸிஜனாக மாற்றுவது எப்படி என்ற ஆய்வு நடக்க உள்ளது

நன்றி.புதியதலைமுறை

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | JESUS LIVES TRUST | A/C NAME | L.VINCENT RAJ |
| BRANCH | KOCHADAI MADURAI | BRANCH | MADURAI |
| BANK NAME | UNION BANK OF INDIA | BANK NAME | AXIS BANK |
| A/C.NO | 493902010001022 | A/C.NO | 109010100247030 |
| IFSC CODE | UBIN0549398 | IFSC CODE | UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333

## 5) மணியார்டர்(E.M.O) :

இயேசு வாழ்கிறார் 54/ பேங்க் காலனி -ஏ
பரவை ,மதுரை-625402

भारतीय डाक India Post

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S







TO:

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.